மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 09 ம் நாள் சனிக்கிழமை
இடைநிலை மனு எண்.02/2022
இன்
அசல் வழக்கு எண்.62/2021
------

G. முருகன் .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. குட்டி என்ற குருசாமி
2. சார்பதிவாளர், சாத்தூர்
3. மாவட்ட ஆட்சியாளர், விருதுநகர் .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
4. தேவகி என்ற இந்திரா
5. கண்ணன் என்ற வேலுச்சாமி
6. கௌரி
7. மகேஸ்வரன்
8. சுப்புராஜ் .. 4 முதல் 9 உத்தேச எதிர்மனுதாரர்கள்/
9. வேலுச்சாமி 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 30.07.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. ஜெகதீஸ்வரன், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. வாசவன், அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6, 8 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், 7 ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளை இவ்வழக்கில் சேர்த்து

வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி 10(2) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்து வாதிக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டும், அதை தொடர்ந்து 1ம் பிரதிவாதி தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்து மண்சுவர் கொண்ட ஓட்டு வீடு கட்டியதை இடித்து அப்புறப்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குள் வாதிக்கு காலி சுவாதீனம் கொடுக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் குறிப்பிட்ட காலத்திற்குள் சுவாதீனம் கொடுக்க தவறும்பட்சத்தில் சமூகம் நீதிமன்றம் அமீனா மூலம் தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை காலி செய்து வாதிக்கு சுவாதீனம் கொடுக்க உத்தரவு பிறப்பிக்க பரிகாரம் கேட்டும் எவ்வித ஆதாரமும் எவ்வித பாத்தியமும் சட்டப்படி ஆவணங்களும் உரிமையும் இல்லாத தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை உள்ளடக்கி 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை செய்து கொண்ட பாகவிஸ்தி பத்திரம் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2897/1982 –யை செல்லாது ன விளம்புகை பரிகாரம் கேட்டும், சட்டத்திற்கு புறம்பாக மோசடியாக உற்பத்தி செய்து கொண்ட பாகவிஸ்தி பத்திரம் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2897/1982 பதிவு செய்யப்பட்ட பதிவுகளை நீக்கரவு செய்ய செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்க பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு விசாரணைக்காக 20.10.2022 ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது.

**2.2.** 1ம் பிரதிவாதி குட்டி என்ற குருசாமி, கெங்கா நாயக்கர், குருசாமி நாயக்கர், சுப்புராஜ், வேலுச்சாமி ஆகிய ஐந்து பேர்கள் உடன்பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். வழக்கிடை தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை உள்ளடக்கி 1ம் பிரதிவாதி மற்றும் அவருடன் உடன் பிறந்த ஷை நான்கு சகோதரர்கள் சேர்ந்து கொண்டு எந்தவித ஆவணம், எவ்வித பாத்தியமும் இல்லாமல் மோசடியாக

பாகப்பிரிவினை ஆவண எண்.2897/1982 செய்து கொண்டார்கள். இதில் கெங்கவ நாயக்கரும் அவருடைய மனைவி ராஜம்மாளும் கடந்த 1–1/2 வருடங்களுக்கு முன்பு தங்களது சட்டப்படி வாரிசுதாரர்களான தேவகி என்ற இந்திரா, கண்ணன் என்ற வேலுச்சாமி, கௌரி, கனி, மகேஸ்வரன் இவர்களை வாரிசுதாரர்களாக விட்டு இறந்து விட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகள் மட்டும் வாரிசுதாரர்கள். தேவகி என்ற இந்திரா, கண்ணன் என்ற வேலுச்சாமி, கௌரி, மகேஸ்வரன் ஆகியோர்கள் 4 முதல் 7 உத்தேச எதிர்மனுதாரர்கள்4 முதல் 7 உத்தேச பிரதிவாதிகள் ஆவார்கள். மேற்படி லேட். கெங்கவ நாயக்கரின் மற்றொரு வாரிசுதாரரான கனி திருமணம் செய்யாமல் வாரிசுதாரர் இல்லாமல் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். ஷை குருசாமி நாயக்கர் அவருடைய மனைவி மூர்த்தியம்மாள் அவர்கள் பிள்ளைகள் மற்றும் வாரிசுதாரர்கள் யாரும் இல்லாமல் இருவரும் இறந்துவிட்டார்கள். ஷை சுப்புராஜ், வேலுச்சாமி ஆகியோர்கள் 8 மற்றும் 9 உத்தேச எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள் ஆவார்கள்.

**2.3.** வழக்கிடை தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை உள்ளடக்கி 1ம் பிரதிவாதி அவருடன் உடன் பிறந்த சகோதரர்கள் கெங்கவ நாயக்கர், குருசாமி நாயக்கர், சுப்புராஜ், வேலுச்சாமி ஆகிய ஐந்து நபர்களும் சேர்ந்து எந்தவித ஆவணமும் எவ்வித பாத்தியமும் இல்லாமல் மோசடியாக பாகப்பிரிவினை செய்து கொண்ட பாகவிஸ்திப் பத்திரம் சாத்துூர் சார்பதிவக அலுவலக ஆவண எண்.2897/1982 செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பதாலும், பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கபடாததினால் மேற்படி பத்திரம் தொடர்பாக கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதா என 4வது எழுவினா எழுப்பப்பட்டுள்ளது. எனவே ஷை பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் இவ்வழக்கில் முக்கிய கட்சியாக சேர்க்க வேண்டிய அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. அப்படி சேர்க்காவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். எனவே 4 முதல்

9 உத்தேச எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை இவ்வழக்கில் சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

**3.1.** மனுதாரர் மனுவில் கண்ட சங்கதிகள் யாவும் மறுக்கப்படுகிறது. இதனடியில் தெளிவாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்ற யாவற்றையும் மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். பிராதில் எதிர்வழக்குரை வழக்கு தாக்கல் செய்தவுடன் பிராதை சீர்திருத்தம் செய்ய எவ்வித நடவடிக்கையும் இல்லை. மனுதாரர்/வாதி அசல் வழக்கில் 7வது ஆவணமாக 24.11.1982 தேதியிட்ட பாகவிஸ்தி பத்திர எண்.2897/1982 பாகவிஸ்தி செய்து சுமார் 40 ஆண்டுகளுக்கு பின் பாகவிஸ்தி பத்திரத்தில் கண்ட நபர்களை கட்சியாக சேர்ப்பதற்கு மனு செய்திருப்பது சட்டவிரோதமாகும். மனு காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப் பட்டுள்ளது. மனுதாரர் பாகவிஸ்தி பத்திரத்தில் பிராது சொத்து யாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது எந்த அயிட்டமாக சேர்க்கப்பட்டுள்ளது என்ற விபரம் பிராதிலும், மனுவிலும் கூறவில்லை.

**3.2.** பாகவிஸ்தி பத்திரத்தில் கண்ட பிராது சொத்து தனக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும், அதனை நீக்கரவு செய்ய பரிகாரம் கோராமல் பாகவிஸ்தி பத்திரத்தையே சட்டப்படி செல்லதக்கதல்ல என்றும் அதனை பதிவுகளில் நீக்கரவு செய்ய பரிகாரம் கோர இயலாது. பிராது தாக்கல் செய்யும்போது 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது வழக்கு மூலம் உள்ளதாக கூறிவிட்டு தற்போது வழக்கு விசாரணைக்காக பட்டியலில் வரும்போது 4 முதல் 9 எதிர்மனுதாரர்களை எவ்வித முகாந்திரமும் வழக்குமூலமும் அறிவிப்பு உரிமையுடைய ஆவணங்கள் எதுவும் இன்றி சட்டவிரோதமாக பிராதில் சேர்க்க மனு செய்யப்பட்டுள்ளது.

**3.3.** பாகவிஸ்தி பத்திரம் 24.11.1982 தேதியன்று பதிவு செய்யப்பட்ட காலம் முதல் நாளது தேதி வரை பாகவிஸ்தி பத்திரம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு நாளது தேதி

வரை பட்டா தீர்வை வரி இனங்கள் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் ஊர்ஜிதத்தில் உள்ளபோது அதை மறைத்து பிராதில் எழுவினா வனையப்பட்டதால் உரிமையுடைய ஆவணங்கள் இன்றி கட்சியாக சேர்க்க பரிகாரம் கோர இயலாது. பிராது தாக்கல் செய்த காலம் முதல் நாளது தேதி வரை இருமுறை பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இருமுறையும் பிராது சீர்திருத்தம் மேற்கொள்ளாமல் வழக்கை பட்டியலில் சேர்த்வுடன் 4 முதல் 9 வரையுள்ள மனு சொத்திற்கு எவ்விதத்திலும் உரிமை இல்லாத நபர்களை கட்சியாக சேர்க்க பரிகாரம் கோர இயலாது. இதற்கு முன்புதாக்கல் செய்த மனுக்களில் பிராதில் கட்சிகளை சேர்க்கவும் சீர்திருத்தம் செய்யவும் உரிய கால அவகாசம் வழங்கப்பட்டு மனு தாக்கல் செய்யாமல் வழக்கை பட்டியலில் விசாரணை செய்வதற்கு வீண் இடையூறு செய்யவும், விசாரணை நாட்களை கடத்தவும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை 1ம் எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4. <u>**2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம்–**</u>

மனுவில கண்ட சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பான சுத்த பொய்யான சங்கதிகள் ஆகும். மனுதாரர் மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. இந்த மனுவில் கண்ட உத்தேச பிரதிவாதிகளை எதற்கு சேர்க்க கோரியுள்ளார் என்று எந்த விபரமும் தெரிவிக்க கிடையாது. அதேபோல அசல் வழக்கிலும், தாவா மனுவில் கண்ட ஆவண எண்.2897/1982 குறித்து எந்த விளக்கமும் தெரிவிக்க கிடையாது. அதேபோல 4 முதல் 9 வரையான உத்தேச பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்திற்கும் என்ன சம்பந்தம் என்றோ? அதுபோல தாவா மனுவில் கண்ட கெங்கவ நாயக்கருக்கு என்ன சம்மந்தம் என்று எந்த விளக்கமும் தெரிவிக்க கிடையாது. அதனால் சம்மந்தமில்லாத நபர்களை வாரிசாக சேர்ப்பதால்

வழக்கு வீண் கால தாமதம் ஏற்டக்கூடும். 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகள் எதற்கு சேர்க்க கோருகிறார் என்பதை தெரிவிக்கவும், இந்த உத்தேச பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்திற்கும் என்ன தொடர்பு என்பதையும் மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**5.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**6.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. எந்த சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** **<u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கில் 4 முதல் 9 பிரதிவாதிகளை உத்தேச பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு மனுதாரர் சொல்லும் காரணம் என்னவென்றால், 1ம் பிரதிவாதி குட்டி என்ற குருசாமி, கெங்கா நாயக்கர், குருசாமி நாயக்கர், சுப்புராஜ், வேலுச்சாமி ஆகிய ஐந்து பேர்கள் உடன்பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். வழக்கிடை தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை உள்ளடக்கி 1ம் பிரதிவாதி அவருடன் உடன் பிறந்த சகோதரர்கள் கெங்கவ நாயக்கர், குருசாமி நாயக்கர், சுப்புராஜ், வேலுச்சாமி ஆகிய ஐந்து நபர்களும் சேர்ந்து எந்தவித ஆவணமும் எவ்வித பாத்தியமும் இல்லாமல் மோசடியாக பாகப்பிரிவினை செய்து கொண்ட பாகவிஸ்திப் பத்திரம் சாத்தூர் சார்பதிவக அலுவலக ஆவண எண்.2897/1982 செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பதாலும், பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கபடாததினால் மேற்படி பத்திரம் தொடர்பாக கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதா என 4வது எழுவினா எழுப்பப்பட்டுள்ளது. எனவே மை பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் இவ்வழக்கில் முக்கிய கட்சியாக சேர்க்க வேண்டிய அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. அப்படி

சேர்க்காவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். எனவே 4 முதல் 9 பிரதிவாதிகளை இந்த வழக்கில் உத்தேச பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில் பிராது தாக்கல் செய்யும்போது 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது வழக்கு மூலம் உள்ளதாக கூறிவிட்டு தற்போது வழக்கு விசாரணைக்காக பட்டியலில் வரும்போது 4 முதல் 9 எதிர்மனுதாரர்களை எவ்வித முகாந்திரமும் வழக்குமூலமும் அறிவிப்பு உரிமையுடைய ஆவணங்கள் எதுவும் இன்றி சட்டவிரோதமாக பிராதில் சேர்க்க மனு செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் கண்ட உத்தேச பிரதிவாதிகளை எதற்கு சேர்க்க கோரியுள்ளார் என்று எந்த விபரமும் தெரிவிக்க கிடையாது. அதுபோல தாவா மனுவில் கண்ட கெங்கவ நாயக்கருக்கு என்ன சம்மந்தம் என்று எந்த விளக்கமும் தெரிவிக்க கிடையாது. அதனால் சம்மந்தமில்லாத நபர்களை வாரிசாக சேர்ப்பதால் வழக்கு வீண் கால தாமதம் ஏற்டக்கூடும். 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகள் எதற்கு சேர்க்க கோருகிறார் என்பதை தெரிவிக்கவும், இந்த உத்தேச பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்திற்கும் என்ன தொடர்பு என்பதையும் மனுதாரர் நிரூபிக்க வேண்டி தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**6.3.** இவ்வழக்கானது இந்த பாகவிஸ்தி பத்திரம் இயற்றப்பட்ட பின்புதான் தொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பாகவிஸ்தி பத்திரத்தில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டால் தான் பத்திரம் தொடர்பாக கோரியுள்ள பரிகாரங்கள் பரிசீலித்து பார்க்க இயலும். எனவே பாகவிஸ்தி பத்திரத்தில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் இவ்வழக்கின் முக்கிய கட்சியாக சேர்க்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6.4.** வழக்கு விசாரணை இன்னும் ஆரம்பிக்கப்படாமல் ஆரம்ப நிலையில் இருந்து வருவதால் உத்தேச தரப்பினர்களையும் வழக்கில் சேர்ப்பதால்

எதிர்மனுதாரர்களுக்கு எந்த நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. வழக்கு சொத்தைப் பொறுத்து மனுதாரர் மீண்டும் 4 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக புதிதாக ஒரு வழக்கு தாக்கல் செய்வதால் ஏற்படும் நேர விரையத்தை தவிர்க்கும் பொருட்டும், ஒரே சொத்திற்காக பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும், 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கலாம் என வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இந்த மனு அனுமதித்து தீர்வு காணப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, **2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09-ம்** நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.02/2022
இன்
அ.வ.எண்.62/2021
**உத்தரவு**
நாள்–09.08.2025.